பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
*22 12 2025 MONDAY 7.15 PM*
ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- இந்தியா - நியூசிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செயல்பாட்டுக்கு வரும்போது, இருநாட்டு மக்களும் பயனடைவார்கள் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

- ஆரவல்லி மலைத்தொடரை பாதுகாக்க, அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கையை உச்சநீதிமன்றம் பாராட்டியிருப்பதாக மத்திய அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

- நேஷனல் ஹெரால்டு முறைகேடு வழக்கில் அமலாக்கத்துறையின் மேல்முறையீட்டு மனுவிற்கு பதிலளிக்குமாறு திருமதி. சோனியா காந்தி மற்றும் திரு. ராகுல் காந்திக்கு தில்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

- ஊழல் வழக்கில், பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கானுக்கு 17 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டதை எதிர்த்து, அவருடைய ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

- ஹாக்கி இந்தியா லீக் போட்டிக்கான புதிய அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இந்தியா – நியூசிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நிறைவடைந்திருப்பது இருநாடுகளுக்கும் மிகப் பெரிய வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டிருப்பதற்காக, நியூஸிலாந்து அமைச்சர் திரு. Todd McClay -யுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, வாழ்த்து தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கான சூழலை ஏற்படுத்த இந்தியாவிற்கு வருமாறு அந்நாட்டு அமைச்சருக்கு தாம் அழைப்பு விடுத்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த ஒப்பந்தம் செயல்பாட்டுக்கு வரும் போது, இருநாட்டு மக்களும் பயனடைவார்கள் என்றும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

இந்தியா – நியூசிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டிருப்பது இருநாடுகளுக்கும் இடையேயான நல்லுறவில் குறிப்பிடத்தக்க மைல்கல் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், குறுகிய காலத்திற்குள் வரலாற்று சாதனையாக இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

இந்த ஒப்பந்தத்தால் இருநாடுகளிலும் வளர்ச்சி இலக்கு விரைவுபடுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மேம்படும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இதனிடையே, பிரதமரின் சிறப்பு தூதராக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் நாளை இலங்கை பயணம் மேற்கொள்கிறார்.

இந்த பயணத்தின்போது, இலங்கை அரசின் தலைவர்களை அவர் சந்தித்து பேசுவார் என வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

ஆரவல்லி மலைத்தொடரை பாதுகாக்க, அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கையை உச்சநீதிமன்றம் பாராட்டியிருப்பதாக மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆரவல்லி மலைத்தொடர் குறித்து உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை விளக்கமாக எடுத்துரைத்தார்.

அரசின் பசுமை சுவர் திட்டம் மூலமாக ஆரவல்லி மலைத்தொடர் பாதுகாக்கப்படுவதாக அவர் கூறினார்.

வனப்பகுதியை அழிக்கும் நடவடிக்கையை தடுப்பது, பசுமை போர்வை மூலம் சூழலியலை மேம்படுத்துவது போன்ற நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

விஞ்ஞானப்பூர்வ மேலாண்மை திட்டத்துடன் இணைந்து, ஆரவல்லி மலைத்தொடர் மேம்பாட்டிற்கு அரசு உறுதிபூண்டிருப்பதாக திரு. புபேந்தர் யாதவ் கூறினார்.

>>>>><<<<<

ராஜஸ்தானில் உள்ள அஜ்மீர் ஷெரீப் தர்காவில் தொடங்கி நடைபெற்று வரும் 814-ஆவது ஆண்டு உருஸ் விழாவையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி சார்பில் மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ பாரம்பரிய சால்வை அணிவித்தார்.

இந்த விழாவையொட்டி, பிரதமர் அனுப்பியிருந்த செய்தியையும் அமைச்சர் வாசித்தார்.

பின்னர், மத்திய அமைச்சருக்கு தர்கா சார்பில் பாரம்பரிய முறையிலான வரவேற்பு அளிக்கப்பட்டது.

உருஸ் விழாவையொட்டி அஜ்மீர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

>>>>><<<<<

உலக அளவிலான தரத்திற்கு பாரம்பரிய மருந்துகளை ஒருங்கிணைப்பதில் இந்தியாவின் ஆயுஷ் துறையும், உலக சுகாதார அமைப்பும் முக்கிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

இதுதொடர்பாக, புதுதில்லியில் இரண்டு நாள் தொழில்நுட்ப திட்ட அடிப்படையிலான கூட்டம் நடைபெற்றது.

சர்வதேச சுகாதார தர நிலைகளுக்கு ஏற்ப, பாரம்பரிய மருந்துகளை உருவாக்குவது குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக மத்திய ஆயுஷ் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே, கடந்த மே மாதம் ஆயுஷ் துறையுடன் உலக சுகாதார அமைப்பு செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நேஷனல் ஹெரால்டு முறைகேடு வழக்கில் அமலாக்கத்துறையின் மேல்முறையீட்டு மனுவிற்கு பதிலளிக்குமாறு திருமதி. சோனியா காந்தி மற்றும் திரு. ராகுல் காந்திக்கு தில்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கில் அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையை ஏற்க விசாரணை நீதிமன்றம் மறுத்துவிட்டதை எதிர்த்து, அமலாக்கத்துறை சார்பில் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதனை விசாரித்த நீதிபதி Ravinder Dudeja, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் உள்ளிட்ட வழக்கில் தொடர்புடையவர்களுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டு, விசாரணையை அடுத்த ஆண்டு மார்ச் 12ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் குடிமைப்பணி அதிகாரிகள் முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்திய பாதுகாப்பு கணக்கு சேவை பணிக்கு தேர்வாகி பயிற்சி பெறும் அலுவலர்களிடையே கலந்துரையாடிய அவர், வரும் 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான இலக்கினை கொண்டு நாடு முன்னேறி வருவதாக கூறினார்.

அதனை நனவாக்குவதில் இதுபோன்ற அதிகாரிகளின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்று அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்களின் பணம் என்பது அவர்கள் கடினமாக உழைத்து வரி செலுத்துவதன் மூலம் கிடைப்பது என்றும், அதனை கையாள்வதில் மிகுந்த வெளிப்படைத் தன்மையுடனும், கண்காணிப்புடனும், பொறுப்புணர்வுடனும் செயலாற்ற வேண்டியது அவசியம் என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>><<<<<

கோவாவில் இரவு விடுதியில் நேரிட்ட தீ விபத்தில் 25 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, கைது செய்யப்பட்ட விடுதி உரிமையாளர்களின் காவலை, மேலும் ஐந்து நாட்கள் நீட்டித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 6ஆம் தேதி கோவா இரவு விடுதியில், ஏற்பட்ட தீ விபத்தை தொடர்ந்து அதன் உரிமையாளர்களான சவுரவ் லுத்ரா, கவ்ரவ் லுத்ரா ஆகிய இருவரும் தாய்லாந்திற்கு தப்பிச் சென்றனர்.

இதையடுத்து, அவர்களை தாய்லாந்திலிருந்து காவல்துறையினர் இந்தியாவிற்கு அழைத்து வந்து கைது செய்தனர்.

இந்நிலையில், காவல்துறை விசாரணையில் உள்ள லுத்ரா சகோதரர்களின் காவலை மேலும் 5 நாட்கள் நீட்டித்து கோவா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக, இதுவரை 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

பாகிஸ்தான் Tehreek-e-Insaf கட்சியின் தலைவர் இம்ரான்கான் மற்றும் அவருடைய மனைவி Bushra Bibi ஆகியோருக்கு ஊழல் வழக்கு ஒன்றில் 17 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டதை எதிர்த்து, அவருடைய கட்சியினர் இஸ்லாமாபாதில் இன்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எதிர்கால தலைமுறையினர் மற்றும் பாகிஸ்தான் மக்களின் உரிமைகளுக்காக போராடிய இம்ரான்கானுக்கு எதிராக இதுபோன்ற குற்றச்சாட்டை கூறியிருப்பது ஏற்கத்தக்கது அல்ல என போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

பாகிஸ்தானின் நீதி நடைமுறையை பலவீனப்படுத்தும் வகையில் இந்த தீர்ப்பு அமைந்திருப்பதாக அவர்கள் குறை கூறினர்.

பாகிஸ்தான் முஸ்லீம் லீக் - நவாஸ் கட்சி தலைமையிலான அரசுக்கு எதிராக போராட்டக்காரர்கள் முழக்கமிட்டனர்.

*இதேபோல், பல்வேறு நகரங்களிலும் இம்ரான்கான் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

>>>>><<<<<

*ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் இன்று காலை நடத்தப்பட்ட கார் குண்டுவெடிப்பில் அந்நாட்டு ராணுவ லெப்டினன்ட் ஜென்ரல் Fanil Sarvarov கொல்லப்பட்டார்.*

*ரஷ்ய பாதுகாப்புப்படையினர் பயிற்சி பிரிவுக்கு தலைவராக இருந்தவர் Fanil Sarvarov.*

*இந்த கார் குண்டுவெடிப்பு தாக்குதலின் பின்னணியில் உக்ரைன் உளவுப்பிரிவுக்கு தொடர்பு இருக்கலாம் என ரஷ்ய பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.*

*எனினும், முழுமையான விசாரணைக்கு பின்னரே அதில் தொடர்புடையவர்கள் குறித்து தெரியவரும் என்று அவர்கள் கூறினர்.*

>>>>><<<<<

*ஹாக்கி இந்தியா லீக் போட்டிக்கான புதிய அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.*

*இதன்படி மகளிர் பிரிவு ஆட்டங்கள், ராஞ்சியில் வரும் 28ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 10ஆம் தேதி வரை நடைபெறுகிறது.*

*ஆடவர் பிரிவு போட்டிகள் சென்னை, ராஞ்சி மற்றும் புவனேஷ்வரில் அடுத்த மாதம் 3ஆம் தேதி தொடங்கி 26ஆம் தேதிவரை நடைபெறுகிறது.*

>>>>><<<<<

*உலக Pole மற்றும் Aerial சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Vir Gahrotra தங்கப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்தார்.*

*ஹங்கேரியின் Budapest-ல் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் ஜூனியர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*இப்போட்டியில் தங்கப்பதக்கம் வெல்லும் முதலாவது இந்தியர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.*

>>>>><<<<<

*உலக டெஸ்ட் சாம்பியன் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்தியா 6-ஆவது இடத்தில் உள்ளது.*

>>>>><<<<<

*20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன் போட்டியை நடத்துவதற்கு இந்தியா உரிமை கோரியுள்ளது.*

*>>>>><<<<<*

புரோ மல்யுத்த லீக் போட்டிக்கான இலச்சினையை இந்திய மல்யுத்த சம்மேளனம் வெளியிட்டுள்ளது.

*>>>>>END<<<<<*